5th November 1965]

Bus with trailers

* 294 Q.—SRI C. KOTHANDARAMA BAGAVATHAR }
SRI V. SANKARAN : } Will
the Hon. the Minister for Industries be pleased to state whether there is any proposal to introduce buses with trailers in the city services of the State Transport Department during the peak hours from 1966 :—

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, a trailer bus is operating between Adyar and Parry's Corner from 22nd October 1965 on an experimental basis.

திரு. வை. சங்கரன் : இதுவரைக்கும் விட்டதில் இதனால் நல்ல பலன் கிடைத்துள்ளதா? அப்படி நல்ல பலன் கிட்டி இருந்தால் மேலும் அதிகமான ட்ரைலர் பஸ்களை விட சர்க்கார் உத்தேசிக்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : பத்து, பதினைந்து நாள் கூட ஆகவில்லை விட ஆரம்பித்து. அதற்குள் ஒரு முடிவுக்கு வரக் கூடாது என்று நினைக்கிறேன்.

திரு. வை. சங்கரன் : இந்த ட்ரைலர் பஸ் மாதிரி டபிள்டெக்கர் பஸ்களை விட சர்க்கார் உத்தேசிக்குமா? அப்படி இல்லை என்றால் அதற்கு காரணம் என்ன?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன் : சென்னையில் டபிள் டெக்கர் பஸ்களை விடுவது இல்லை என்று முடிவு செய்து இருக்கிறோம்.

மாவட்ட ஹரிஜன சேம நல கமிட்டிகள்

■ 74.—கேள்வி.—திரு. ஆ. கு. சுப்பையா : கனம் உள் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மாவட்ட ஹரிஜன சேம நல கமிட்டிகள் அமைக்கப் பட்டதா?

(இ) மாவட்டவாரியாக அங்கத்தினர்கள் விவரம் அடங்கிய பட்டியல் ஒன்று சபை முன் வைக்கப்படுமா?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) & (இ) இதுபற்றிய விவர அறிக்கையொன்று [a] சபைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. கரு. சீமைச்சாமி : இந்த அறிக்கையிலே இராமநாதபுரம் மாவட்ட குழு பற்றிய விவரம் தருகிறபோது, ஸ்ரீ சின்னசாமி, ஹரிஜன், ஸ்ரீ ராமச்சந்திரன், ஹரிஜன் அல்லாதவர் என்று போடப் பட்டு இருக்கிறது. ஒன்பது பேர் கொண்ட கமிட்டி போடப்பட்டு இருக்கிறது. ஆனால், மற்ற ஜில்லாக்களில், ஹரிஜன் அல்லாதவர் என்று போடப்படவில்லை. இதற்குக் காரணம் என்ன?

---

[a] 105–112-ம் பக்கங்களில் முதல் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[5th November 1965

கனம் திரு. பூ. கக்கன் : கலெக்டர் லிஸ்ட் அனுப்பும்போது அப்படி அனுப்பியிருப்பார். அவ்வாறு அச்சடித்து இருக்கிறது.

திரு. இராம. அரங்கண்ணல் : சென்னை நகரத்திற்கு ஹரிஜன நலக் குழு எப்போது அமைக்கப்பட்டது? இல்லையென்றால் எப்போது அமைக்கப்படும்?

கனம் திரு. பூ. கக்கன் : சென்னை நகருக்கென்று அமைக்கப்படவில்லை. இருந்தாலும் கருவிகள் கொடுப்பதற்கு ஒரு கமிட்டி இருக்கிறது. இப்போது சென்னை ஜில்லாவிற்கு தனி க்ஷேமநல அதிகாரி போடப்பட்டு இருக்கிறார். சென்னை நகரத்திற்கு கமிட்டி அமைப்பது பின்னால்தான் யோசிக்கப்படும்.

திரு. கரு. சீமைச்சாமி : மாவட்ட குழுவின் வேலைகள் என்னவென்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : மூன்று மாதத்திற்கு ஒரு தரம் கூடி தீண்டாமையை ஒழிப்பதற்கு என்னென்ன வழிவகைகள் செய்ய வேண்டும், ஹரிஜனங்களுக்கு கஷ்டமில்லாமல் இருக்க என்ன செய்யவேண்டும் என்று பரிசீலனை செய்வார்கள். ஹரிஜன முன்னேற்றத்திற்கு என்ன செய்யவேண்டுமோ அதையெல்லாம் அவர்கள் செய்வார்கள்.

திரு. ம. கமலநாதன் : தலைவர் அவர்களே, சேலம் மாவட்ட கமிட்டியில் ஹரிஜன் அல்லாத வேறு எம்.எல்.ஏ.—க்களோ, மற்றவர்களோ இல்லை என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா? இதற்கான காரணம் என்ன?

கனம் திரு. பூ. கக்கன் : காரணம் ஒன்றும் இல்லை. அங்கிருந்து கலெக்டர் சிபார்சு செய்து இருப்பார்கள். இங்கிருந்து அரசாங்கம் பரிசீலனை செய்து முடிவு செய்யப்பட்டிருக்கிறது. யார், யார் சேவையில் ஈடுபட்டிருக்கிறார்களோ அவர்களைப் பார்த்து போட்டிருக்கிறோம்.

திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் அவைத்தலைவர் அவர்களே, சென்னையில் ஒரு குழு அமைக்கப்படுமா என்று முன்பு கேட்டபோது, அது கவனிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போதும் கவனிக்கப்படும் என்று கூறியிருக்கிறார்கள். எப்போது விரைவிலே கவனிக்கப்பட்டு நடவடிக்கை எடுத்துக்கொள்ள முயற்சி எடுக்கப்படும்?

கனம் திரு. பூ. கக்கன் : சென்னை நகரில் மிகப் பெரிய பிரச்னை கிடையாது. தீண்டாமைப் பிரச்னை அவ்வளவாகக் கிடையாது. தொழில் துறையில் அவர்களுக்கு எவ்வளவு ஒத்தாசை செய்ய வேண்டுமோ, கல்வித் துறையில் எவ்வளவு ஒத்தாசை செய்ய வேண்டுமோ, அதை அரசாங்கம் செய்து வருகிறது. தீண்டாமை இருக்கிற இதர ஜில்லாக்களில் அதை அகற்ற தக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

5th November 1965]

திரு. தா. சின்னசாமி : தலைவர் அவர்களே, தீண்டாமை ஒழிப்புக் குழு சேரியில் போய் பிரசாரம் செய்கிறார்களா? கிராமப்புறங்களிலும் ஜாதி ஹிந்துக்கள் வாழும் ஊர்களிலும் போய் "இந்த மாதிரி எல்லா சமுதாயத்தினரும் சீராக ஒரே குடும்பமாக வாழ வேண்டும்; அது தான் காந்தி அடிகளாரின் திட்டம்; எல்லோருக்கும் சமத்துவம் உண்டு ; எல்லோரும் ஓர் குலம், ஆகவே, அனைவரும் சமூகமாக வாழவேண்டும்" என்று பிரசாரம் செய்தால் நலமாக இருக்கும் என்று அரசாங்கத்தை கேட்டுக் கொள்கிறேன்.

கனம் சபாநாயகர் : இது கேள்வியாக இல்லையே!

திரு. இராம. அரங்கண்ணல் : முன்பு சென்னை மாவட்டத்தில் ஹரிஜன நல வேலைகள், டைரக்டர் ஆஃப் ஹரிஜன் வெல்ஃபேர் அவர்களின் நேரடிப் பார்வையில் நடைபெற்று வந்தது. அண்மையில் மாவட்ட வேலைகள் கலெக்டர் அவர்களுடைய நேரடிப் பார்வையின் கீழ் கொண்டுவரப்பட்டு இருக்கிறது. இந்தக் காரணத்திற்காக சென்னை நகருக்கு தனி ஹரிஜன நலக் குழு அமைக்கப்படுமா?

கனம் திரு. பூ. கக்கன் : இது பற்றி அரசாங்கம் பரிசிலனை செய்யும்.

திருமதி ராஜாத்தி குஞ்சிதபாதம் : தலைவர் அவர்களே, சென்னை மாநில ஹரிஜன ஆலோசனைக் குழுவிலே, ஹரிஜனங்களைத் தவிர ஹரிஜனங்கள் அல்லாத அங்கத்தினர்கள் சேர்க்கப்படுகிற நிலைமை இருக்கிறதா? அப்படி இல்லை என்றால், ஏன் என்று கேட்க விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : லிஸ்டைப் பார்த்தால் தெரியும். இதிலே ஜாதி ஹிந்துக்களும் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள்.

திரு. எஸ். முத்துலிங்கம் : தலைவர் அவர்களே, இந்தக் கமிட்டி உறுப்பினர்கள் எத்தனை வருடங்களுக்கு ஒரு முறை தேர்ந்து எடுக்கப்படுகிறார்கள்? தொடர்ந்து ஒரே மெம்பர்கள்தான் இருக்க வேண்டும் என்ற நோக்கம் அரசாங்கத்துக்கு உண்டா?

கனம் திரு. பூ. கக்கன் : அங்கத்தினர்கள் பொதுவாக 3 வருடம் வரை அங்கத்தினர்களாக இருப்பார்கள். ஏற்கனவே இருந்த மெம்பர்கள் நல்ல பணி செய்தால் அவர்களையும் சேர்த்துக் கொள்வார்கள். முன்பு இருந்தவர்களை விட்டுவிட வேண்டுமென்பது கிடையாது. தொடர்ந்து அவர்கள் பணியாற்ற வழி உண்டு.

திரு. ம. கமலநாதன் : பொதுவாக, சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லோருமே ஹரிஜன நலத்தில் அக்கறை உள்ளவர்கள் என்ற காரணத்தால், எல்லோரையுமே கமிட்டி உறுப்பினர்களாக ஆக்க அரசாங்கத்திற்கு எண்ணமுண்டா?

கனம் திரு. பூ. கக்கன் : எல்லோரையுமே உறுப்பினர்களாக ஆக்குவது என்பது இல்லை. ஹரிஜன நலக்குழுவில் அந்தந்த கான்ஸ்டிடியென்ஸி கூட்டம் நடக்கும்போது அவர்களை கோ-ஆப்டெட் மெம்பர்களாகச் சேர்த்துக் கொள்வார்கள். ஜாதி ஹிந்துக்களும் அங்கேபோய் நடவடிக்கைகளைப் பார்க்கலாம்.

[5th November 1965

திரு. வி. எஸ். எஸ். மணி : ஹரிஜன நலக் குழுவின் கொள்கை என்ன?

கனம் திரு. பூ. கக்கன் : கனம் அங்கத்தினர் அவர்கள் கொள்கை பற்றி தெரிந்து இருக்கிறார்கள். இருந்தும், கேள்வி கேட்க வேண்டுமென்று கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன். கொள்கை என்னவென்றால், "தீண்டாமை ஒழிய வேண்டும், ஜாதி வித்தியாசம் இருக்கக்கூடாது, பிறப்பில் உயர்வு, தாழ்வு என்ற பாகுபாடு இருக்கக் கூடாது, ஹரிஜனங்கள் பொருளாதாரத் துறையிலும், சமூகத் துறையிலும், கல்வித் துறையிலும் முன்னேற வேண்டும்" என்பது. 'ஏழை என்றும், அடிமை என்றும் எவரும் இல்லை ஜாதியில்' என்ற கொள்கைதான் கையாளப்படுகிறது.

திரு. கரு. சீமைச்சாமி : இந்த ஆலோசனைக் கமிட்டி கூட்டத்தில் தற்போது ஹரிஜன் அல்லாத எம்.எல்.ஏக்கள் கூட கோ-ஆப்ட் செய்துகொள்ளப்படுவதாக அமைச்சர் சொன்னார்கள். அந்த மாதிரி எந்தக் கூட்டத்திற்கும் எனக்கு அறிவிப்பு வரவில்லை. இனிமேல் நடக்கிற கூட்டத்திற்காவது அறிவிப்பு வந்தால் நாங்கள் ஆலோசனை சொல்வதற்கு உகந்ததாக இருக்காதா?

கனம் திரு. பூ. கக்கன் : ஹரிஜன் அல்லாத எம்.எல்.ஏ. தன் கான்ஸ்டிடுயன்ஸியில் நடக்கும் கூட்டத்திற்கு வந்தால் கோ-ஆப்டெட் மெம்பராகச் சேர்த்துக்கொள்ளப்படுவார்.

திரு. இராம. அரங்கண்ணல் : இப்போது ஹரிஜன நலக்குழு உறுப்பினர்களைப் பொறுக்குவதில் கையாளப்படுகிற கொள்கை என்ன?

கனம் திரு. பூ. கக்கன் : கலெக்டர் அவர்கள் பரிசீலனை செய்து, அனுபவம் உள்ளவர்களை சிபார்சு செய்து, ஹரிஜன நல டைரக்டர் அவர்களுக்கு அனுப்புவார்கள். ஹரிஜன நல டைரக்டர் பரிசீலனை செய்து கவர்ன்மெண்டுக்கு அனுப்புவார்கள். கவர்ன்மெண்டு பார்த்து முடிவு எடுக்கும்.

திரு. எம். குழந்தைசாமி கவுண்டர்: இந்தக் கமிட்டியில் மலை சாதியினர்களை சேர்த்துக்கொள்வதில் என் பெயரை மட்டும் சேர்த்திருக்கிறார்கள். இந்தக் கமிட்டியில் எம்.எல்.ஏ.-க்கள் அல்லாதவர்களையும் சேர்த்துக்கொள்ள முடியுமா?

கனம் திரு. பூ. கக்கன் : ஆதிவாசிகளுக்கு என்று தனியாக ஆலோசனைக் குழு இருக்கிறது. அதில் ஆதிவாசிகளை நியமிப்பார்கள். மற்றபடி ஜில்லாக் கமிட்டியில் எம்.எல்.ஏ.-க்கள் அல்லாதவர்களும் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

ஹரிஜன மாணவர்களுக்கு உபகாரச் சம்பளம்

■ 295 கேள்வி—திரு. கோ. சி. மணி : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா:—

(அ) 1964–65-ல் ஆடுதுறை தொகுதியிலிருந்து உபகாரச் சம்பளம் கோரி மனுச் செய்துகொண்ட ஹரிஜன மாணவர்கள் எத்தனை பேர்?